புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை

எண்: 13/போ.து/டி.பி-4/2016

தேதி :27.07.2016

செய்திக் குறிப்பு

**வேகக் கட்டுப்பாட்டுக் கருவி பொருத்தாத போக்குவரத்து வாகனங்களுக்கு 01.08.2016 முதல் வாகனத் தகுதிச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது**

போக்குவரத்து வாகனங்கள் புதிதாக வாங்கி பதிவு செய்து இரண்டாம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் போக்குவரத்துத் துறையின் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு செய்து தகுதிச் சான்றிதழ் வழங்கிய பின்னர்தான் சாலையில் இயக்குவதற்கு அனுமதிக்கப்படுகின்றன.

இந்திய அரசின் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989, விதி எண் 118ல், 15.04.2015 தேதியிட்ட அறிவிக்கை எண் G.S.R.290(E) மூலம் செய்யப்பட்ட திருத்தத்தின்படி, குறிப்பிட்ட போக்குவரத்து வாகனங்களுக்கு அதிகபட்ச வேகம், ஒரு மணிக்கு 80 கி.மீ. க்கு மிகாமல், வேகக்கட்டுப்பாட்டு கருவி பொருத்தப்பட வேண்டும். மேலும், மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் தங்கள் தேவைககேற்ப அதிகபட்ச வேகத்தினை ஒரு மணிக்கு 80 கி.மீ.க்கு மிகாமல் வேக நிர்ணயம் செய்து அமல்படுத்தலாம் என்பதறகேற்ப புதுச்சேரி அரசானது கடந்த 07.10.2015 அன்று அரசாணை எண்.20/2015-ன்படி குறிப்பிட்ட போக்குவரத்து வாகனங்களுக்கான வேகக் கட்டுப்பாட்டினை நிர்ணயம் செய்துள்ளது.

மத்திய அரசின் 22.04.2016 தேதியிட்ட அறிவிக்கை எண். S.O.1472(E)-ன்படி குறிப்பிட்டுள்ள அனைத்து போக்குவரத்து வாகனங்களுக்கும் 2016 ஜுலை மாதம் 31-ஆம் தேதிக்கு முன் அதன் உரிமையாளர்களால் வேகக்கட்டுப்பாட்டுக்

..2/-

கருவி பொருத்தப்பட வேண்டும்; 2016 ஆகஸ்ட் மாதம் 1-ஆம் தேதி முதல் குறிப்பிட்ட போக்குவரத்து வாகனங்களுக்கு வேகக் கட்டுப்பாட்டுக் கருவி பொருத்துதல் கட்டாயமாக்கப்படுகிறது. வரும் 01.08.2016 முதல் வாகனத் தணிக்கையின் போது வேகக்கட்டுப்பாட்டுக் கருவி பொருத்தப்படாத வாகன உரிமையாளர் மீது மோட்டார் வாகனச் சட்ட, விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், 01.08.2016க்குப் பின்னர் வேகக்கட்டுப்பாட்டுக் கருவி பொருத்தப்படவில்லையெனில், அத்தகைய குறிப்பிட்ட போக்குவரத்து வாகனத்திற்கு வாகன தகுதிச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

போக்குவரத்து வாகன உரிமையாளர்கள் தங்களது வாகனங்களுக்கு வேகக்கட்டுப்பாட்டு கருவி பொருத்தி உரிய தகுதி சான்றிதழ் பெற்று தமது வாகனங்களை இயக்குதல் வேண்டும். வேகக் கட்டுப்பாட்டுக் கருவி பொருத்தாமல் இயக்கப்படும் வாகனங்கள் மீது மோட்டார் வாகன சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதால் வேகக் கட்டுப்பாட்டு கருவி பொருத்தி வாகனங்களை இயக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

GOVT. OF PONDICHERRY * TRANSPORT DEPARTMENT *

27.7.2016

(எஸ்.டி. சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்
புதுச்சேரி